**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Crlmp. No.378/2026**

| Deposition of Name | யசோதை | Prosecution | PW-2 Chief |
|---|---|---|---|
| Father Name | க/பெ.ராமச்சந்திரன் | Court | JM Court, Sirkali |
| Village | வெள்ளைபள்ளம் | Taluk | Sirkali |
| District | மயிலாடுதுறை | Age | 61/2026 |

Solemnly affirmed by Tmt. R. கீதா., Grade III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day.

**19.06.2026.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**சத்தியப்பிரமாண வாக்குமூலம்**

நான் இம்மனுவின் மனுதாரரான தமிழ்செல்வனின் தந்தை ஹரிபிரகாசம் அவர்களின் உடன் பிறந்த சகோதரி ஆவேன். இந்த வழக்கின் எதிரி விமலா அவர்கள் அவருக்கு பிறந்த பிள்ளைகளான இரண்டாம் எதிரி மாகாதேவன் 3 வது எதிரி மகேந்திரன் நான்காவது எதிரி வினோதினி ஆகியோருடன் சேர்ந்து ஒரு போலி வாரிசு சான்றை தயார் செய்து ஆவண எழுத்தர் வள்ளவன் த/பெ.கலியபெருமாள் ஆவண எழுத்தர் பதிவுகள் DWL No.B1/2009/MDU ஆகியோர்கள் இணைந்து சொத்தினை அபகரித்து கொண்டார்கள். மேற்படி வழக்கு சொத்தானது எனது தந்தை முருகேசன் சுயசம்பாதியத்தில் வாங்கியது. என்னுடன் பிறந்தவர்கள் 1. அண்ணபூரணி, 2. கௌசல்யா, 3. மல்லிகா 4. தவமணி, 5. ஹரிபிரக்காசம், 6வதாக நான், 7. இந்திரஜித் ஆகியோர்கள் ஆவோம். எனவே நீதிமன்றத்தார் அவர்கள் சொத்திற்கான சட்டரீதியான வாரிசுகளை ஏமாற்றி போலி ஆவணங்கள் மூலம் ஏமாற்றிய எதிரிகள் 1 முதல் 4 எதிரிகளையும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்த ஆவண எழுத்தர் வள்ளவன் மீதும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.